**செய்தி வெளியீடு எண் : 2275** **நாள் : 15.11.2023**

**செய்தி வெளியீடு**

**புதுக்கோட்டையில் ரூ.67.83 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் 8.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத்துறை கட்டடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (15.11.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத் துறை சார்பில் 67.83 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையான புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 8.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத்துறை கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் “மக்களைத் தேடி மருத்துவம்” சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் “இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும்-48”, நலவாழ்வு நடைப்பயிற்சி 8 கி.மீ. சுகாதார நடைபாதை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**தமிழ்நாட்டின் மூன்றாவது பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையான புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை திறந்து வைத்தல்**

**70 ஆண்டுகளுக்கு பிறகு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக, புதுக்கோட்டையில் 67 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாட்டின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும்**

**மருத்துவமனையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**இக்கல்லூரியில் 2023 - 2024 ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் 50 மாணவர்கள் சேர்க்கைக்காக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை 10.14 ஏக்கர் பரப்பளவில் மருத்துவமனை மற்றும் நிர்வாகக் கட்டடம், மாணவ மாணவியர் விடுதிக் கட்டடம், ஆசிரியர் மற்றும் முதல்வர் தங்கும் விடுதி போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. கூடுதலாக, பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமணைக்கு 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலான தேவையான அதிநவீன உபகரணங்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, இக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு தேவையான ஆசிரியர், நிர்வாகம், மற்றும் கல்விசாரா பணிகளுக்கு 148 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.**

இப்புதிய புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமணை இந்தியாவிலேயே மிகச் சிறந்த கட்டமைப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தமிழகத்தின் மத்திய பகுதியில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு தரமான பல் மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கு வழிவகை ஏற்படும்.

**<u>பொது சுகாதாரத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள 27 புதிய கட்டடங்களை திறந்து வைத்தல்</u>**

புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி சுகாதாரப் பகுதி மாவட்டங்களைச் சார்ந்த கீழாநிலை புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், ராசநாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், பாலாண்டம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், நீர்பழனி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மலைக்குடிபட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு கட்டடம், பரம்பூர் துணை சுகாதார நிலையத்திற்கான

கட்டடம், மேலமுத்துக்காடு துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், புலியூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நாகுடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், ஏம்பாவயல் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கோட்டைப்பட்டிணம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மணமேல்குடி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மும்பாலை துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், விச்சூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், பி.ஆர். பட்டிணம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நிலையூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கொத்தமங்கலம் கிழக்கு துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கும்மங்குளம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், குப்பக்குடி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், எல்.என். புரம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், விராலிப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், வேங்கிடக்குளம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், முத்துப்பட்டிணத்தில் செவிலியர் குடியிருப்பு, கட்டுமாவடி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நெல்வேலி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், அழியாநிலை துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கருக்காக்குறிச்சி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம்;

என மொத்தம் 8.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் புதுக்கோட்டையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ். இரகுபதி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. கே. நவாஸ் கனி, திரு. எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வி. முத்துராஜா, திரு.எம். சின்னதுரை, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஐ.சா. மெர்சி ரம்யா, இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும்

நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.டி.எஸ். செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகத்திலிருந்து, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

.........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in